**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Crl.MP. No.3661/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ஆரோக்கிய தோமினி ராஜ் | Prosecution | Sworn statement |
| Father Name | தோமஸ் | Defence | |
| Village | 80.இராதாநல்லூர் | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 42/2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day
**08.12.2023.**
சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**சத்தியப்பிரமாண வாக்குமூலம்**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். எதிரிகள் அந்தோனிதாஸ் த/பெ. தோமஸ் மற்றும் 8 நபர்கள் சேர்ந்து என் மீது திருவெண்காடு காவல் நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்தார்கள். என்னை அபாசமாக திட்டி 2012 ம் வருடம் ஊரை விட்டு விரட்டிவிட்டார்கள். அது சம்பந்தமாக இந்நீதிமன்றத்தில் மனு செய்து Crlmp.644/2013 தேதி தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளது. அரசு சலுகைகள் எதுவும் நான் பெற இயலவில்லை . மின் இணைப்பு மற்றும் ரேஷன் கடையில் பொருட்கள் பெற இயலவில்லை. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் 2012 ஆண்டு என்னை வெளியேற்றுவிட்டார்கள். தரங்கம்பாடி கண்ணியர் இல்லத்திற்கு நான் அந்தோனிதாஸ் மனைவியை கண்டிக்க வேண்டி நான் தற்காப்பு கடிதம் எழுதினேன். அந்த கடித்தை திருடி எடுத்து வந்து சுற்றி உள்ள நபர்களிடம் அதை காட்டி அதை அவர்களுக்கு சாதகமாக ஆக்கி கொண்டார்கள். என்னை அவமானம் படுத்தினார்கள். ஆதிதிராவிடர் கிறிஸ்துவ சமுதயத்தை சேர்ந்தவர் என்பதால் தேவர் சாதியை சேர்ந்த முத்து மகேந்திரன்,ராஜ்பிள்ளை ஆகியோர் என்னை கையெடுத்து கும்மிட சொல்லி அவமானம் படுத்தினார்கள்.நான் மீண்டும் சென்று குடியிருக்க

விடாமல் தொடர்ந்து தொந்தரவு செய்து வருகிறார்கள். மனுவில் சொல்லிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு கொள்கிறேன்.